குயில்

பதிவெண்: எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 28-10-58 செவ்வாய் | இசை: 22

தமிழனுக்குப் பிறக்க வேண்டும்

வழுக்கி விழுந்த ஒருதமி ழச்சி
வயிற்றில் தமிழ்மக னுக்குப் பிறந்தோன்
அழுக்குச் சுமப்பவ னாயினும் அவனை
அந்தமிழ் நாட்டார் நம்பலாம். ஆனால்
வழுக்கி விழுந்த ஒருதமி ழச்சி
வயிற்றில் பார்ப்பன னுக்குப் பிறந்தோன்
விழிக்கு நல்லனாய்த் தோன்றினும் அவனை
மேன்மைத் தமிழர் நம்பவே வேண்டாம்!

தமிழச்சி வயிற்றில் தமிழர்க்குப் பிறந்த
தமிழ்மகன் தமிழர்க்கு நல்லது செய்வான்
தமிழச்சி வயிற்றில் பார்ப்புக்குப் பிறந்த
தறுதலை தமிழர்க்கு நல்லது செய்யான்!
தமிழச்சி வயிற்றில் தமிழர்க்குப் பிறந்த
தமிழ்மகன் தமிழர் நெறியையே சார்வான்
தமிழச்சி வயிற்றில் பார்ப்புக்குப் பிறந்த
தறுதலை பார்ப்பனர் அடியையே சார்வான்!

வழுக்கி லாத தமிழ்மகள் ஒருத்தி
வழுக்கினும் தமிழன் மார்பினில் வீழ்க
தழைத்த தேனும் பழுத்ததே ஆயினும்
தமிழ்மகள் எட்டியை எட்டுதல் சாதலே!
இழுக்கு வண்டெச்சில் ஆயினும் தமிழ்மகள்
இனத்தேன் உண்ணலால் தீதொன்றும் இல்லையே
இழுக்குத் தேடற்க பார்ப்பானைக் காணற்க
இறக்க நேரினும் இனப்பகை எண்ணற்க!

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

குடம்

இது தூய தமிழ்ச்சொல். இதையும் வடசொல் என்று ஆக்கிவிட எண்ணினர் வடவர்; குடாகாயம் என்ற ஒரு தொடரைக் கட்டித் தத்துவ நூற்களில் விட்டிருந்தார்கள். சிவஞான போதத்திற்கு உரை எழுதவந்த சிவஞான யோகிகள் அங்கு இந்தக் குடாகாயத்தைக் கண்டாராதலின் அதுபற்றிய புனைசுருட்டை விளக்க எண்ணினார். குடம் என்ற தமிழ்ச் சொல்லும் ஆகாயம் என்னும் வடசொல்லும் புணரவேண்டுமானால் குடவாகாயம் என்று புணரவேண்டும்; ஆதலால் யோகிகள் குடாகாயம் என்று புணர்ந்துள்ள இது மரூஉ என்று கூறி, குளம் ஆம்பல் என்பன குளாம்பல்என்று புணர்ந்துள்ளதையும் எடுத்துக் காட்டினார். இதனால் வடவர் குடம் என்பதற்கு வடமொழிச் சட்டை போட்டதும், அது தமிழ்ச் சொல்தான் என்று சிவஞான யோகிகள் அந்தச் சட்டையைக் கிழித்தெறிந்ததும் உலக வெளிச்சமாகிவிடவே வடவருக்கு வந்தது எரிச்சல். சிவஞான யோகிகள்மேல் படை எடுக்கவேண்டும்; நேரடி நடவடிக்கையில் நுழைவாரா வடவர். அதுதானே இல்லை! கோடரிக் காம்பொன்று தேடினார்கள், சிவஞான யோகிகளைத் தொலைக்க.

இதற்குமுன் வைத்தியநாத தேசிகர் என்ற ஒருவர் இலக்கண விளக்கம் என்பதொரு நூல் எழுதியிருந்தார். அந்நூல் வடமொழியினின்றே தமிழ்வந்தது என்றகருத்தை அடிப்படையாகக் கொண்டது. அதைச் சிவஞான யோகிகள் 'இலக்கண விளக்கச் சூறாவளி' என்ற நூலின் வாயிலாக மறுத்துச் சிதறடித்தார்.

உள்ளதைச் சொன்னால் நொள்ளையனுக்கு நோக்காடுதானே? வைத்தியநாத தேசிகர்க்குச் சிவஞான யோகிகள்மேல் பகை உணர்ச்சி இருந்துகொண்டிருந்தது.

குடம் தமிழ்ச்சொல்லே என்று எடுத்துக் காட்டியதற்காக அச் சிவஞானயோகிகள்மேல் ஏவினார்கள் வடவர், கோடரிக்காம்பாகிய வைத்தியநாத தேசிகரை.

எடுத்தார் தேசிகர் இறகை! — குடம் என்பது வடசொல்லே என்று எழுதினார். இப்போது வண்ணாஸ்த்ரிதான் வண்ணாத்தி ஆயிற்று என்று தெ. பொ. மீ. சொன்னது போல!

சிவஞான யோகிகளின் உண்மைக் கருத்தைத் தேசிகரின் இந்த மறுப்பு அசைத்துவிடவில்லை. ஆயினும், தமிழர்களுக்கு அது தமிழ்ச் சொல்லேஎன்பதை நன்றாகவிளக்கவேண்டுமே என்ற அருள் உள்ளத்தால், சிவஞானயோகிகளின் மாணவராகிய சபாபதி நாவலர் தாம் எழுதிய திராவிடப் பிரகாசிகை வாயிலாக ஒரு விளக்கம் தரலானார். அது வருமாறு:

குடம் தமிழ்ச்சொல் ஆதல், குடந்தம் பட்டு, குடக்கூத்து, குடமுழா என்றற்றொடக்கத்தாற் பயின்றுவரும் தமிழ் வழக்குரைகளால் அறிக. இன்னும் குடம் தமிழ் இயற்சொல் என்பது குடந்தம்பட்டு எனவரும் திருமுருகாற்றுப்படைத் தொடர்க்கு-வழிபட்டு என்றும், வணக்கம்பட்டு என்றும் உரைப்பர்-என்றும், "குட" என்பது "தட" என்பது போல வளைவு உணர்த்துவதோர் உரிச்சொல் ஆதலின் அதனடியிற் பிறந்த பெயருமாம் என்றும் நச்சினார்க்கினியர் உரைகூறுதலால் அறிக.

இதுவரைக்கும் கூறியவற்றால், சிவஞான யோகிகளும், நச்சினார்க்கினியரும், குடம் தமிழ்ச்சொல் என்பதையும், மேலும் காரணப் பெயர் என்பதையும் விளக்கியது அறிவிக்கப் பட்டது.

அதுபற்றி இன்னும் சில கூற விரும்புகின்றோம். தட என்பது வளைவுக்குப்பெயர்.

அவற்றுள், தட என்கிளவி கோட்டமும் செய்யும்

என்றது காண்க.

அதுபோலவே குட என்பதும் வளைவுக்குப் பெயர் என்க: வளைவு பெற்றுள்ள காரணத்தால் குடம் காரணப்பெயர். குடம் போல் அதாவது உடல் வளைந்து வணங்குதற்கும் குடந்தம்என்பர் தமிழ்ச்சான்றோர் என்பது காட்டப்பட்டது.

தொடர் 3-ஆம் பக்கம்

அண்ணாத்துரையா
எனக்குப் பொற்கிழி அளித்தார்?

என் பாட்டைக் கூட்டத்தில் பாடி விடுவது! பாடிய பிறகு இது மாசிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னது என்று கூறுவது இதற்கு நான் பதில் கூறுகின்றேன். இந்தக் கற்பனை அவர்கட்கு எங்கிருந்து கிடைத்திருக்கும் என்பதை நாம் ஊன்றி நோக்க வேண்டும்.

பொது மகளின் இல்லத்தில் இதுபோன்ற கருத்துக்கள் – செயல்கள் கிடைக்கும்.

ஒரு தந்தை பணம் கொடுக்காத காரணத்தால் வருவதை நிறுத்திக் கொள்ளுகிறான். அல்லது மறுத்து ஒதுக்கப்படுகின்றான். அவன் இறந்துவிடவேண்டும் என்பதில்லை. இன்னொரு தந்தை வந்து விட்டபின் பையன் முன்னைய தந்தையை மாசித் தந்தை என்பான்.

என்னை மாசிக் கவிஞன் என்பவன் அத்தன்மையை மேற்கொண்டவனாயிருக்கலாம். அல்லது கலப்பில்லாத தேவடியாள் மகனாயிருக்கலாம்.

—

இனி, இவ்வாறு வளைவின்பெயரால் வணங்குதலைக் குறிப்பதென்பது தமிழ் நூற்களில் பெருவரவினதாகும்.

தோட்டி என்பது யானைசெலுத்துவோன் வைத்திருக்கும் கருவி; அது வளைந்திருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. அதனால் வணங்குதலைத் தோட்டி என்ற பெயராலும் குறித்துள்ளார்கள் பழந்தமிழ்ச் சான்றோர்.

"தோட்டியின் வணக்கம் வேட்டவன் விரும்பி" என்று (பெருங், 1-45-64) வந்துள்ளதை நோக்குக. இதனால் வளைவுள்ள தோட்டி போல் வணங்குதல் என்பது ஏற்பட்டது இன்னும் தோட்டி என்றேவணங்குதலைச் சொன்ன துண்டோ எனின் கேட்க.

பதிற்றுப் பத்து 62-ம் பாட்டின் 10-ம் பாட்டில்

"தடக்கையர் தோட்டி செப்பி"

என்று வந்துள்ளது இதற்கு உரையாசிரியர், தோட்டி வளைந்திருத்தலின் வணக்கத்திற்குப் பெயராயிற்று என்றார்.

இந்நாளைய தமிழர்கள் குடம் என்பதை வடசொல் என்று பிழையாக நம்புகிறார்கள் என்று எண்ணி நாம் இவ்வாறு – அது தமிழ்ச் சொல்என்பதற்குக் காரணங்காட்ட முன்வந்தோம் இல்லை. வேறு எதற்குக் கூறினோம் என்பதை நோக்குக.

நம் தமிழ் அன்னை பகைவரால் - பெருநாட்களாகவே – எவ்வாறு அலக்கழிப்புக்கு ஆளாகி வருகின்றாள்! நோக்குக.

நம் தமிழன்னை பகைவர்களரால் அலக்கழிக்கப்படுவது மட்டும் அன்றி அப் பகைவர்களின் அடிவீழ்வாராகிய தமிழர்களால் எவ்வாறு அலக்கழிக்கப் படுகின்றாள்! நோக்குக.

பகைவர், நம் தமிழன்னையை ஒழித்துக் கட்டுவதில் எவ்வளவு பெருமுயற்சி கொள்ளுகின்றார்கள்? நோக்குக.

அந்தப் பகைவர்கட்குத் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்ளும் அண்ணாத்துரைகள் மீனாக்கி அழகிகள், சேதுக்கள் எவ்வாறு ஒத்து வேலைசெய்து வருகின்றார்கள். வந்துள்ளார்கள் நோக்குக!

—

புதுச்சேரி, தி. வ. ஆ. ௧௯௮௧ ஐப்பசி ௧௨.

காரைக்கால் அரிசி!

காரைக்கால் அரிசி எங்கே? இங்கே ஏன் அரிசிப் பஞ்சம்? இது நம் புதுவை யரசுக்குத் தெரியாதா? தெரிந்தும் இந்த நிலையை விட்டு வைப்பது ஏன்?

அரிசியை அயல் அரசுக்குக் கடத்திக் கடத்திக் காய்ப்பேறிய காரையின் கைகளை அறவழியில் நிறுத்த இந்த அரசினர் அக்கரை கொள்ளாத காரணம் என்ன?

தமிழர் வயிற்றில் அடித்து, அரிசியை அயலில் கடத்துவார்தாம், இந்த ஆட்சியைத் தாங்குகின்றார்களா! அவர்கள் ஆதரவு இல்லா விட்டால் இந்த ஆட்சி பொத்தென்று கீழே விழுந்து விடுமோ!

நல்லதற்குப்பாடுபடுவதால் இந்தஆட்சிக்கு வலிவு குறைந்துவிடும் என்றால் பார்ப்போமே! நல்லதற்குப் பாடுபடுவதால் சில சட்டமன்ற உறுப்பினர் முறுக்கிக் கொள்வார்கள் என்றால் முறுக்கிக் கொண்டு தொலையட்டுமே! அரிசியை அயலவர்க்குக் கொடுத்துவிட்டு இங்குப் பட்டினியைத் தழுவவேண்டும் என்ற அத்தனை கட்டாயத்தைத் தமிழர் விட்டுவைப்பாரா?

இரண்டொரு முதலாளிகள்! ஏறியவிலைக்கு அரிசியை, நெல்லை, அயலில் கடத்தலாமே என்று நினைப்பது இயல்பு! அதை விட்டு வைப்பது அடுக்குமா?

இதற்குத்தான் சட்டமன்றில் தஞ்சைச் சட்டத்தையும் தள்ளி அரிசி முதலாளிக்குச் சலுகை கொடுக்கப்பட்டதா?

இந்த அரசினர் உள்ளத்தைத் தெரிந்து தான், காரைக்கால் அதிகாரிகளும் அரிசி கடத்தலுக்குத் துணை போகின்றார்களா?

அரிசியில்லை அரிசியில்லை என்று மக்களின் வயிறு எரிந்து வருகையிலா இந்த அரசியல் விளையாட்டு?

இப்போது புதியதாக வந்துள்ள உயர் அதிகாரியர்க்கு இந்த அரிசிப் பஞ்சப் புயல் தெரியாதா? எங்கும் கிடுகிடுக்கும் நிலை அவர் மாளிகையில் ஏறவில்லையா?

காரைக்கால் அரிசியில் ஒருமணிகூட அயலூருக்கு — காரைக்கால் சுற்றுப்பட்டு, புதுவை சுற்றுப்பட்டுத் தவிர ஏற்ற முடியாதபடி தக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரிசி புதுவையிலும் விளையுமிடத்திலும் நய விலைக்குக் கிடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம். ★

நன்றி!

அருப்புக்கோட்டையிலிருந்து திரு. மு. மீ. சீனிபாண்டியன் அவர்கள் "குயில்" வளர்ச்சிக்கென ஒரு ரூபாய் அனுப்பியுள்ளார். பெற்றுக்கொண்டோம்.

நன்றி!

—அமைச்சர்.

தேவை

சிங்கப்பூர் திரு. அ. சி. சுப்பையா அவர்களால் எழுதி வெளியிடப் பெற்ற சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேஸ் என்ற நூல் வைத்திருப்பவர்கள் அன்புகூர்ந்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகிறோம். விலைக்குக் கிடைப்பினும் நன்று.

அமைச்சர்,
குயிலகம், புதுச்சேரி.

ஏன்?

கேள்வி: ஆவடியில் 80 கோடி வெண் பொற்காசு செலவில் நிறுவப்பட்டிருந்த படை வைப்பு நிறுவனத்தை மூடிவிடவோ, அப்புறப் படுத்தவோ தில்லி அரசினர் திட்டமிடுகிறார்கள் ஏன்?

பதில்: பழிவாங்க இருக்கும் தமிழ் நாட்டில் படைவைப்பு நிறுவனம் ஒன்றா?

கேள்வி: டி. ஆர். மகாலிங்கம் முத்தமிழ் கலையரசு என்ற பட்டம் உடையவரா?

பதில்: புதிதாக ஏற்பட்டுள்ள திரைப்பட எழுத்தாளர்சங்கத்தினர்க்குவிருந்துசெய்வதாகக் கண்ணதாசன் விடுத்த அழைப்பிதழில்அவ்வாறு குறித்திருந்தது. முத்தமிழ் என்பது இயல், இசை, கூத்து! இந்தமூன்று கலைகளிலும் அரசாக அமையும் தகுதி டி. ஆர். மகாலிங்கத்திற்கு இல்லை என்பதை அந்த அழைப்பே ஒத்துக் கொள்ளுகிறது போலும். அதனால்தான் அப் பட்டப் பெயரை ஊன்றிச் சொல்லவில்லை. ஊன்றிச்சொல்லியிருந்தால் முத்தமிழ்க் கலையரசு என்று சொல்லியிருக்கலாமல்லவா? அதுதானே இலக்கணமும்! ஒருகால் இடையில் க் வைக்க வேண்டும் என்பது பட்டம் கொடுத்தவர்க்கும் ஏற்றுக்கொண்டவர்க்கும் அதை அழைப்பில் மேற்கொண்டவர்க்கும் தெரியாமலும் இருக்கலாம்!

கேள்வி: தாத்துதல் என்றால் கொடுப் பதா? அதை நீங்கள் இலக்கணத்தோடு விளக்கு வீர்களா?

பதில்: தா என்ற வினை முதனிலை இறுதி நிலை முதலிய உறுப்புக்களை ஏற்கும்போது — தந்தான் (இறந்த காலம்) தருகின்றான் (நிகழ் காலம்) தருவான் (எதிர்காலம்) என வேறுபடும் ஆனால் தா என்ற அந்த முதல்நிலை தொல் காப்பிய காலத்திற்கு முன்னேயும் - வடநாட்டி லும் தமிழேவழங்கிவந்த காலத்திலும் அவ்வாறு திரியவில்லை, என்பது தர்மானந்த கோசம்பி ஆராய்ச்சியால் தெரிகின்றது. இந்நாள் அவ்வாறு வழக்கத்தில் உண்டா என்றால் உண்டு. உண்டு! இன்னும் தாத்திவிடு, கொடுத்துவிடு என்ற பொருளில் வழங்கி வருகின்றது.

இந்த மாடு நமக்கு உதவாது; சந்தையில் தாத்திவிடு என்று இன்னும் சொல்வதை இத் தென்னார்க்காடு மட்டுமல்லாது எல்லாவிடத்தும் கேட்கலாம்.

தாத்திவிடு என்பதில் தாதி என்பது ஒற்றிரட்டி இறந்தகாலம் காட்டிற்று ஆதல் பெறப்படும். தாதல்-கொடுத்தல் தொழிற்பெயர் தாத்தல் தல் இறுதிநிலையும் (த்) கூட்டும் பெற் றது என்க. தாதல், தாத்தல் ஒருபொருளன.

தாதன் — கொடுப்பவன். இதை அந்நாள் ஆரியர், தாசன் என்றார்கள். தாசன் - கொடை யாளன் என்பது அந்நாளைய பொருள் என்று கோசம்பி விளக்கினார்.

கேள்வி: இந்தி என்றால் திருடர்கள் என்று பொருள் என்று சென்னைப் பல்கலைக் கழக இந்திப் பேராசிரியர் சங்கரராசு, அமைச்சர் சுப்பிரமணியன் தலைமையில் சொன்னார். அவர் அப்படிச் சொல்லுமுன்பே அதன் பொருள் தமிழர்க்குத் தெரியாதல்லவா?

பதில்: தெரியும். "இந்தி தமிழ்நாட்டில் ஆட்சிபெறவேண்டும் என்று சொல்லத் தொடங்கியநாளிலிருந்து தமிழர்கள். இந்திக்குப் பேராசிரியர் பொருளை வைத்துத்தான் பேசினார் கள். இந்தி தமிழ்நாட்டில் ஆட்சிபெற வேண்டும் என்பதைத் திருடர்கள் தமிழ் நாட்டில் ஆட்சிபெற வேண்டும் என்று அவர்கள் கூறுவதாகத்தாமே நினைத்தார்கள்.

குயிலுக்கு...

பின் கண்ட ஊர்களில் விற்பனையாளர்கள் தேவை.

செங்கற்பட்டு,	மதுராந்தகம்,
தாம்பரம்,	செஞ்சி,
விழுப்புரம்,	பண்ணுருட்டி,
திருக்கோவிலூர்,	கோவில்பட்டி,
காரைக்குடி,	குடியாத்தம்,
அரியலூர்,	விருதுநகர்,
ஈரோடு,	வலங்கைமான்,

திரைப்பட எழுத்தாளர் சங்கம் அடிப்படை நோக்கம்

இச் சங்கத்திற்குள்ள அடிப்படை நோக்கம் கீழ்வருமாறு அமைதல் வேண்டும்:

(1) கதை – பிறர் எழுதியதையே தேடிப் பிடிக்கவேண்டும். அந்தக்கதை இன்னுரால் எழுதப்பட்டது என்று தெரியாதிருக்கச் சிறிது மாற்றம் செய்துகொள்ளலாம். ஆனுல் ஒன்றை மட்டும் மறவாது பின்பற்றவேண்டும். இன்னுர் எழுதிய கதையைத் தழுவியோ, மாற்றியோ எழுதியதாக வெளிக்குத் தெரியவே கூடாது. தெரிந்தால் படமுதலாளியிடம் மதிப்புக்குறைவு ஏற்படும், கதைக்குப் பணம் கொடுக்கவும் மறுப்பார்கள்.

(2) பேச்சமைப்பு — பிறர் எழுதிய செய்யுள் நூற்களேயும், உரைநடை நூற்களேயும் - அவை வெளிவந்தவுடனே வாங்கி அடுக்கி வைத்துக்கொண்டால் மட்டும் போதாது. கருத்தாகப் படிக்கவேண்டும். பேச்சு எழுதும் போது அந் நூற்களிலிருந்து சொற்ருெடர்களே எடுத்துத் தாம்எழுதியதுபோல எழுதிக்கொள்ள வேண்டும். இதில் மானமோ நாணமோ இருக்க வேண்டியதில்லே. இன்னுர் நூற்களிலிருந்து திருடினேன் என்று எந்த எழுத்தாளனுவது சொல்லிவைத்தால் அது எழுத்தாளர் கூட்டத்திற்கே குறைவை ஏற்படுத்தும்.

(3) பாட்டு – பிறர்பாட்டினின்று அடி அடியாய் அல்லது தொடர் தொடராய் எடுத்துக் கொள்ளலாம். ஆனுல் திருடியது தெரியக் கூடாது. அசைகளே மாற்றிக்கொள்க. தெரிந்து விட்டால் பட முதலாளி பாட்டின் முதலாசிரியரின் முகவரியைத் தெரிந்துகொள்ளநேரும் எழுத்தாளர் வருமானத்தில் மண்விழும்.

எவர்எழுதியதையும்பார்க்காமல், இருக்கும் கையிருப்பைக் கொண்டே பாட்டு எழுதித் தொலேக்கவேண்டிய கட்டாயம் ஏற்படலாம் அப்போது எழுத்தாளர்க்குத் தெரிந்த மட்டமான சொற்களேயோ மட்டமான கருத்துக்களேயோவைத்துப் பாட்டுஎழுதிவிட அஞ்சுதல் கூடாது. முதலாளிகளில் எவராவது ஒருவர் முட்டாளாயில்லாமலும் இருக்கலாம். அவர் இதென்ன மட்டமாக இருக்கிறதே என்று கேட்டால் அப்போதுதான் பணம் வரும்என்று ஒருபோடு போட்டுவிட வேண்டும். எழுத்துப் பிழை சொற்பிழை பொருட் பிழை நல்லவேளேயாய் எழுத்தாளர்க்குத் தெரியாமல் இருந்தால் அதைப் பெருமையாகக் கொள்ளவேண்டும்.

(4) பொதுநெறி – இந்தத் தமிழ்நாட்டு மக்கட்குத் திரைப்பட எழுத்தாளர் காட்ட வேண்டிய பொதுநெறிகள் இரண்டு உண்டு. ஒன்று பெரியார் நெறி – மற்ருென்று இராசகோபலாச்சாரி நெறி முன்னது தமிழர்நெறி மற்றது ஆரிய நெறி.

இவற்றில், பெரியார் கொள்கையால் பெருமை தேடிக்கொள்ள வேண்டும் ஆரிய நெறிக்கே அடிமைப்பட வேண்டும் ஏனென்ருல், ஏதுங்கெட்ட ஆரியர்தாம் நம்மைத் தலேயில்தூக்கிக்கொண்டு ஆடக்கூடும் அதிலும் நம் எழுத்தாளர் கூட்டத்தில் ஆரியனுக்குப் பிறந்தவனிருந்தால் அவனுக்கே முதன்மை கொடுக்கவேண்டும்.

இந்த நான்கும் இன்றியமையாதவை திரைப்பட எழுத்தாளர்க்கு!

★

உறுப்பினராக...

கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
தனி இதழ்	13 காசு	16 காசு
ஓராண்டு	ரூ. 6—75,	ரூ. 8--50.
ஆறு மாதம்	ரூ. 3—37.	ரூ. 4—50.
வாழ்நாள்	ரூ. 100.	

தனி இதழ் வேண்டுவோர் 0–15 (பதினைந்து) காசு) அஞ்சல் தலேகள் அனுப்புக.

பிசிராந்தையார்

தொடர் நாடகம்

காட்சி கச.

இடம் : *பாண்டிய நாட்டுத் தலைநகராகிய மதுரை அரண்மனையின் ஓர்பால் அமைந்த ஆய்வு மன்றம்.*

காலம் : *காலை.*

உறுப்பினர் : *பாண்டியன் அறிவுடை நம்பி, அரசி, தோழியர், பிசிராந்தையார், மேற்படியார், அமைச்சன், அனிச்சை, சோழநாட்டுத் தூயன், பச்சைக்கிளியின் கணவனாகிய மான்வளவன், அவன் மகன் ஐந்து ஆண்டுடைய பொன்னன், வலைபோட்ட உடையப்பன், ஓடைப்பூ*

பச்சைக்கிளியின் தந்தை பட்டுக்குடை, தாய் முத்துநகை, பெருங்குடிமக்கள் பலர்.

காட்சித் தலைப்பு :

இறந்தவள் இவள்தானா?

நிலைமை : *ஆய்வு மன்றம் பாண்டியன் அறிவுடைநம்பியின் தலைமையில் துவங்குகின்றது.*

பாண்டியன் : பெருங்குடி மக்களே, அமைச்சரே, பாவேந்தர் பிசிராந்தையாரே, தோழியர்களே,

பச்சைக்கிளியைப் படுகொலை செய்தவன் அவள் கணவனாகிய மான்வளவன் என்றும்; அவ்வாறு கொலை செய்யத்தக்க கொடிய உள்ளத்தை அவனுக்கு உண்டாக்கியவன் சோழநாட்டுத் தூயன் என்றும் விரித்துரைக்கக் கேட்டோம். விரித்துரைத்தவர் அந்த மான்வளவனும், சோழநாட்டுத் தூயவனுமே ஆவார்.

பாண்டியநாடு பச்சைக்கிளியை இழந்தது மக்களின் கண்ணீர் வழிந்தது. உலகம் நம்மைத் தூற்றுதல் பொழிந்தது. இப் பெருங்குற்றம் புரிந்தவர் மான்வளவனும் தூயனுமே. ஆயினும் அவர்கள் குற்றத்தை உணருகின்றார்கள். அது பற்றி அவர்கள் தூக்கில் ஏறவும் துணிகின்றார்கள். அவ்வாறு செய்யும்படி பணிகின்றார்கள்.

இங்கு ஆராயவேண்டியது என்னவெனில் குற்றவாளிகளின் வாய்ப்பிறப்பை மட்டும் கொண்டு, இவர்கள் குற்றவாளிகள் என்று முடிவுகட்டி விடலாமா என்பதுதான்.

அனிச்சை : குற்றவாளிகள் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள் குற்றத்தை! மற்றும் ஆராயவேண்டியது ஒன்றுமில்லை.

அரசர் : அமைச்சர்!

அமைச்சர் : குற்றவாளிகள் இவர்கள். இதில் எனக்கு ஐயப்பாடில்லை.

அரசர் : பாவேந்தர் சும்மா இருந்துவிடலாகாது.

பிசிராந்தையார் : குற்றம் செய்தவர்களை மறைக்க நாங்கள்தாம் குற்றவாளிகள் என்று இவர்கள் சொல்லியிருக்கவும் கூடுமே!

அரசர் : நான் எண்ணியதும் அதுதான்!

அரசி : இறந்த பச்சைக்கிளியின் பெற்றோரின் வாய்ப்பிறப்புத் தேவை.

அரசர் : இதுபற்றிப் பெற்றோர் – தெரிந்ததைக்கூற வேண்டுகின்றேன்.

பட்டுக்குடை : *(முன்வந்து)* அரசே! இறந்த பச்சைக்கிளி என் மகள். சோழநாட்டின் தூயன் என்பவர், பச்சைக்கிளியை மணக்க எண்ணியிருந்தார். பச்சைக்கிளி மான்வளவனை மணக்க எண்ணியதால் அவ்வாறே மணத்தை ஆதரித்தோம் இதில் சோழநாட்டுத் தூயருக்குப் பச்சைக்கிளியைப் பழிவாங்க வேண்டும் என்றோ மான்வளவனைப் பழிவாங்க வேண்டும் என்றோ எண்ணமிருந்திருந்தால் அதுஎங்கட்குத் தெரியாது.

முத்துநகை: நான் பச்சைக்கிளியின் தாய். என்பெயர் முத்துநகை. என் கணவர் சொன்னதையே நான் சொல்லுகின்றேன்.

அரசர்: நன்று! நன்று! வலைபோட்ட உடையப்பன் இது பற்றித் தெரிந்ததைக் கூறுக.

உடையப்பன்: எனக்குத் தெரிந்தது அரசர்க்குத் தெரிந்ததுதானே.

அரசர்: ஓடைப்பூ?

ஓடைப்பூ: நானும் அதைத்தான் சொல்லுகிறேன். கடைசி முறையாக வலையை இழுத்தார் என் கணவர். இழுக்கமுடியவில்லை. அரசர் வந்தார் புலவர் வந்தார் அவர் வந்தார் *(அமைச்சரைக் காட்டி)* சேர்ந்து இழுக்கப் பிணப்பெட்டி கரைக்கு வந்தது. திறந்து பார்த்தோம். திடுக்கென்று தூக்கி வாரிப்போட்டது! பங்சைப் பிள்ளைத் தாய்ச்சி குத்துப்புண் வெட்டுப்புண்ணுடன் பிணமாகி இருந்ததைப் பார்த்தோம்.

அரசர்: இனி, இறந்த பச்சைக்கிளியின் பிள்ளையாகிய பொன்னன் வாய்ப்பிறப்பைக் கேட்டாக வேண்டும்.

(பொன்னன் அரசர் எதிர் நிறுத்தப்படுகின்றான் பெற்றோரால்)

பொன்னன்: எங்க அம்மா செத்துப் பூட்டாங்க.

அரசா: எப்படி?

பொன்னன்: எப்படியா? *(விழிப்பு)*

பிசிராந்: அரசர் கேள்வி அவனுக்கு விளங்கவில்லை. என்குழந்தாய் அம்மாவைக் கொன்றவர் யார்?

பொன்னன்: எங்க அம்மாவைக் கேளுங்க.

(நகைப்பு)

பிசிராந்: அம்மா எங்கே?

பொன்னன்: செத்துப் பூட்டாங்க.

பிசிராந்: உன் தாயைக் கொன்றவர் யார் என்று கேட்க வேண்டும் யாரைக் கேட்டால் தெரியும்.

பொன்னன்: எங்க அம்மாவைக் கேட்டால் தெரியும். *(நகைப்பு)*

பிசிராந்: தாடிக்காரர் இலந்தம்பழம் கேட்டார் நீ கொடுத்தாய் என்றெல்லாம் நீ சொன்னதுண்டு. அது கொண்டு இன்னார்தாம் அம்மாவைக் கொன்றிருக்க வேண்டும் என்று உனக்குத் தோன்றவில்லையா?

பொன்னன்: எனக்கொண்ணும் தோணலலே. எங்கப்பா நான்தான் கொண்ணேண்ணு சொல்றாங்க; அவுங்க கொல்லவே இல்லே.

அரசன்: எதைக் கொண்டு சொல்லுகின்றாய்!

பொன்னன்: நான் பாக்கிலேல்ல!

(சிரிப்பு)

அரசர்: குற்றவாளிகள் இருவரின் வாய்ப்பிறப்புக்களும் ஒன்றோடொன்று முரண்படவில்லை. இருவர் வாய்ப்பிறப்புக்களை மற்றவர்களின் வாய்ப்பிறப்பு எதிர்க்கவில்லை.

ஆயினும் கொலை செய்ததாகக் கொலையாளி சொல்லுவதைத் தவிர அதை நேரிற் பார்த்ததற்குச் சான்றில்லை. கொலை செய்த ஒருவரை மறைக்க நான்தான் கொலை செய்தேன் என்று மான்வளவன் சொல்லக்கூடும் என்று பாவேந்தர் கூறியதை மறுக்க வழியில்லை.

பிசிராந்: அது மட்டுமா! மான்வளவன் யாரைக் கொலை செய்தான்? அடையாளம் காட்டவில்லை.

அரசர்: ஆம்! அதுதான் காட்டப் போகிறோமே! நீ கொலை செய்தது இவளைத்தானா என்று கேட்கப்போகின்றோமே.

பொன்னன்: எங்கே இருக்கிறாங்க எங்க அம்மா? உள்ளேயா?

பிசிராந்: காட்டுவார் அரசர் இருதம்பி.

அரசர்: குற்றவாளிகளை அழைத்து வாருங்கள்.

பிசிராந்: இரண்டு குற்றவாளிகளும் ஒரே நேரத்தில் பார்க்கும்படி செய்யலாகாது.

அரசர்: ஒகோ! முதலில்?

பிசிராந்: மான்வளவன் வரட்டும்! அவன் வந்தபின் அவனை சூழ்ந்தபடி இரண்டு போர் வீரர்கள் இருக்கும்படி செய்யவேண்டும்.

அரசர்: அவ்வாறே ஆகட்டும்! படைத் தலைவர் ஏற்பாடு செய்க.

(படைத் தலைவன் செல்லுகின்றான். இரண்டு போர் வீரர் சூழ மான்வளவன் கொண்டுவந்து நிறுத்தப்படுகின்றான்.

அரசன்: மான்வளவனே, ஒருத்தி உன் கண் எதிரில் காட்சியளிப்பாள்! உன்னால் கொலை செய்யப்பட்டவள் அவள் தானா என்று பார்த்துச் சொல்ல வேண்டும்.

(அங்கு ஒருபுறம் கட்டப்பட்டிருந்த திரை விலக்கப்படுகின்றது. இறந்த பச்சைக்கிளி காட்சியளிக்கின்றாள்.)

மான்வளவன்: ஆ! பச்சைக்கிளி!......

(அவள்மேல் பாயும்முன் சூழ்ந்திருந்த போர்வீரர்கள் பிடித்து நிறுத்துகின்றார்கள்)

......கற்புள்ளவளே, கருதாது உன்னைக் கொல்ல முயன்றேன். உயிர் தப்பினாய். உடல் நலம் அடைந்தாய் அரசர் அருளினாலே!

துன்பப்படுத்தினேன். ஆயினும் எதிரில் நின்று என்னை இன்பப்படுத்தினாய். என்னை மன்னித்து விடு! அரசர் பெருமானே, அவையத்தாரே, கத்தியால் குத்தினேன், கத்தியால் வெட்டினேன். அதுபற்றி நீங்கள் இடும் தண்டனையை ஏற்றுக் கொள்ள அட்டியில்லை ஆனால் அவள் இதோ இருக்கின்றாள். இதோ அவள் வாழ்கின்றாள். நான் வாழ விரும்புகின்றேன். எனக்குத்தூக்குத் தண்டனைமட்டும் வேண்டாம்.

பிசிராந்: பொறு! பச்சைக்கிளி இவள் தானா?

மான்வளவன்: ஆம் ஐயா! இவளே தான்

பிசிராந்: உன் மனைவி இவள் தானா?

மான்வளவன்: ஆம் ஐயா! இவளேதான்.

பிசிராந்: என் தம்பி! அம்மா இவள்தானா?

பொன்னன்: இவுங்கதான் *(மகிழ்ச்சி முகம்)*

பிசிராந்: அம்மாவைக் கொன்றவர் யார் தம்பி?

பொன்னன்: அவுங்களே கேட்டுக்குங்க. சொல்லுமா!

பிசிராந்: அது பாவை தம்பி! தச்சுப் புலவர் செய்தது!

மான்வளவன்: ஆ!

பொன்னன்: மரமா? எங்கம்மா எங்கே?

மான்வளவன்: அந்தத் தீயவன் செய்த வஞ்சத்தால்—தெரியாமல் மறைத்தேனே அழ கோவியத்தை...

பிசிராந்: கழிவிரக்கம் வேண்டாம். இதைக் கேள் இந்தப் பாவையை – இந்தப் பச்சைக் கிளியை நீ எந்த நிலையில் கண்டாய்? எப்படிக் குத்தினாய்? அது போல இப்போது நீ செய்து காட்ட வேண்டும்.

மான்வளவன்: ஐயோ ஐயா! அவையத்தார்களே, அரசர் பெருமானே நான் அவ்வாறு செய்ய மாட்டேன் என் மனைவியைத் துன்புறுத்தச் சொல்லாதீர்கள்!

அரசர்: அவள் உரு அமைந்த மரக்கட்டையைத் துன்பப் படுத்தவும் ஒப்பாத நீ, உயிரோவியத்தையே படுகொலை செய்தாயே அப்பா!

மான்வளவன்: கொடியவன்! நான்தொலைய வேண்டும். என்போன்ற கொடியவர்களைப் பாண்டி நாடு சுமக்கப் பொறுது. நான் உயிரோடிருந்தால் என் மனத்தொல்லை அறுது!

அரசர்: அப்படியானால் அவளைக் கொலை செய்ததுபோல் செய்து காட்ட மாட்டாயா?

மான்வளவன்: நினைத்தாலே நெஞ்சு வெடித்து விடும்போலிருக்கின்றதே!

அரசர்: அப்படியானால், புண்படுத்தப் பட்ட நிலையில் அவளை நீ பார்! இப்படித்தான் அவளை வெட்டிச் சிதைத்தேன் என்று ஒப்புக் கொள்!

(மற்றொரு, திரை விலக்கப்படுகின்றது. கட்டிலில் பச்சைக்கிளியின் சிலதந்த உடல் காணப்படுகின்றது)

பொன்னன்: அம்மா *(அழுகிறான்)*
(அனைவரும் அழுகிறார்கள்)

மான்வளவன்: ஆம்ஐயா! இந்தத் தீயவனே!

(அண்டையிலிருந்த போர் வீரனின் கத்தியைப் பறிக்க முயலுகிறான். போர் வீரன் மான்வள்வனைப் பிடித்து நிறுத்துகிறான்)

பிசிராந்: மனதைச் சிதறவிட வேண்டாம்!

மான்வளவன்: *(மற்றொரு போர் வீரனை நோக்கி)* ஐயா நான் ஏன் இவ்வாறு அலக்கழிக்கப்பட வேண்டும்! அருள் கூர்ந்து கத்தியைக் கொடுங்கள்!

அரசன்: மான்வளவனை அழைத்துப் போவீர்கள்! அதுபோலவே, தூயவன் வரும்படி செய்வீர்கள்.

(இரண்டு திரைகளும் மூடப்படுகின்றன. தூயன் இரண்டு போர்வீரர் சூழ தோன்றுகின்றான்)

∝○★○∝

பிழை திருத்தம்

சென்ற இதழில் வெளிவந்த "இயற்கையோடியைந்த இருந்தமிழ்" என்ற கவிதையின் முதலாம் நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவின் பதினாறும் அடி "சிறந்திருந்து காகாவென் சிறப்பொலியுந் தமிழொலியே" என்றிருக்கவேண்டும். அதற்கடுத்த தாழிசையின் மூன்றும் அடி "மாகாத லுறநன்கு" எனத் தொடங்கவேண்டும். திருத்திக்கொள்க.

சுவைசேர்க்க வாரீர்

—○— மான் —○—

வரைப்புருவம் இடம்மாறிக் கீழேவந்து
வரம்புகட்டி நிற்பதுபோல் அரும்புமீசை
சிறையெடுக்கும் என்னுளத்தை காதல்தூண்டில்
சிக்கவைக்கும் இருவிழிகள் கவிதைபேசும்
வரைக்கோடு வாலிபத்தின் சுவைக்கவிதை
வளர்ந்துவிட்ட திண்தோள்கள்! வெற்றிவீரம்
சுரக்கின்ற நடைபோட்டு வந்தாலெந்த
சுந்தரிதான் உம்மழகில் சொக்கிப்போகாள்?

பேசாது வீதிவழி போனால்போதும்
பார்த்திருந்தால் பசிதீர்ந்து போகும்அன்பே!
கூசாது என்வீட்டுப் பக்கம்வந்தால்
குறிவைத்துப் பார்ப்பீரே சன்னல்பக்கம்
பேசாத பேச்செல்லாம் பேசிஅன்பைப்
பரிமாறிக் கொள்ளுமந்த பார்வைபோதும்
வீசிவரும் துயர்தனிமை தீரஇன்ப
வெள்ளத்தில் என்னுள்ளத்தை நனைத்துக்கொள்ள!

வண்ணந்தான் இனிப்பதெல்லாம் சுவைத்தால்தானே
வாழ்வினிக்கும் தமிழ்கூட படித்தால்தானே
கண்ணெதிரே கண்டாலே இனிக்குமந்தக்
காதல்தரும் பார்வைக் கீடாகஅன்பே
காணேன்நான் வேறுபொருள் எதிலும்இன்பம்!
கண்ணெதிரே உம்முருவை ஆசைதீரக்
காணாத நாளெனக்குக் கசப்பாய்த்தோன்றும்
கனிச்சாறே சுவைசேர்க்க வாரீர்அன்பே!

□▭□

பாதை தவறியதால்...!

சேலம், எஸ். முனுசாமி

வெண்பா

அறிஞரும் நல்ல அறிஞர் அருமை!
அறிஞரின் தம்பிகளோ நல்லோர்—அறிஞர்தம்
நேரிய பாதை தவறியதால் வீழ்ந்தாரே
ஆரியர் காலடியிற் றான்.

பார்ப்பனரும் தமிழும்!

"பார்வேந்தன்"
(மதுரைச் செந்தமிழ்க் கல்லூரி.)

பண்டைத் தமிழ் இலக்கியங்களான பத்துப் பாட்டு எட்டுத்தொகை போன்ற சங்கப் பாடல்கள் நமக்குக் கிடைத்தற்கரிய செல்வங்களாகும். அத் தனித் தமிழ்ப் பாடல்களுக்குப் பிற்காலத்து உரை எழுத வந்தார் சில பார்ப்பனப் பெருமக்கள்.

வந்தேறிகளாள அப் பார்ப்பனர்கள் தமிழைக் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிந்துகொண்டவர்கள் அல்லர். காலச் சூழ்நிலையால் தமிழைக் கற்றுக்கொண்டால்தான் பிழைக்க முடியும் என்று தமிழகத்தில் ஒரு நிலையேற்பட்டவுடனேயே தமிழை முனைந்து கற்றுக்கொண்டவர்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. இன்று அரசியல் அலுவலகங்களில் இந்தி கற்றவர்க்கே வேலைக்கு மனுச்செய்தால் முதலிடம் என்று கூறியவுடனேயே விழுந்து விழுந்து கற்பவர்கள் அவர்களாகவே இருப்பது கண்கூடாகையால் இப் பார்ப்பனமக்கள் எதையும் வாழ்வுக்காகச் செய்வர் என்பது உண்மை.

பார்ப்பன மக்களின் கொள்கையும் பேச்சும் செய்கையும் முடிவில் தங்கள் கொள்கையை—தங்கள் –கருத்தை நிலைநிறுத்துவதாகவே இருக்கும் என்பது இன்று அவர்களோடு பேசிப்பார்த்தால் நன்கு தெரியும்.

எவ்வளவோ எதிர்ப்பிருக்கும் இவ் விருபதாம் நூற்றாண்டிலேயே இப்படி இருக்கின்றார்கள் என்றால் நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் போன்றார் உரையெழுதப்புகுந்த அறுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகத்தில் அவர்கள் சொல்லியதே சொல்லென்று – உரையென்று கொண்ட தமிழர்களைக் குறை சொல்வதிற்கில்லை!

திருவள்ளுவ மாலை – என்று சங்கச்சான்றோர்களின் பெயரைப்போட்டு எவரெவரோ பல பாடல்களைப் பாடிவைத்திருக்கிறார்கள். அப் பாடல்களால் வடமொழியின் வேதத்தை திருக்குறள் அடிப்படையாகக்கொண்டது என்ற கருத்து வலியுறுத்தப் படுகிறது.

தனித்தமிழில் நூல் யாத்த திருவள்ளுவரின் திருக்குறளையே இவ்வாறு வடநூலின் தழுவல் என்று சொன்னால் வேறுஎதை இவர்கள் விட்டுவைப்பார்கள் என்பது சிந்தித்தற்குரிய தோன்றும்.

ஆரியர்க்கு எதுசொன்னாலும் எதுஎழுதினாலும் தம் கருத்தை வலியுறுத்துவதே என்பது முன்னர் கூறப்பட்டது. அதன்படியே பரிமேலழகர்,

"பகுத்துண்டு பல்லுயி ரோம்புத லூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை" (332)

என்ற குறளுக்கு உரை காணும்போது "எல்லா நூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பாகலின் (திருவள்ளுவர்க்கு) ஈண்டும் பொதுப்பட நூலோரென்றும்" கூறினார் என்கிறார். இவ்வெல்லா நூல்களினும் என்பது எதைக்குறிக்கிறது? பரிமேலழகருக்குத் திருக்குறள் வேதத்தினின்று மொழிபெயர்க்கப்பட்டது என்று கூறல்வேண்டும் என்பது அவா. அதை அவர் நேரடியாகக் குறிக்காது ஏனோ எல்லா நூல்களினும் என்று கூறி அவர்கருத்தை வலியுறுத்துகிறார். இவ்வாறு பல இடங்களில் பலபட வடநூலை உயர்த்திக் கூறுகிறார். அன்றுதான் பார்ப்பனர்கள் அவ்வாறு தங்கள் கருத்தைப் புகுத்தி வந்தனர் என்றால் இன்று எப்படி? என்று ஒருசிறிது ஆராய்வோம்!

நாம் கூறவில்லை! புறநானூற்றுக்கு உரைசெய்ய வந்த திரு, ஔவை-துரைசாமி அவர்கள் கூறுகின்றார்கள் "……..ஒருநாள் யான் திரு, டாக்டர் உ. வே. சாமிநாதையர் வெளியிட்ட புறநானூறு இரண்டாம் பதிப்பு ஒன்றைப் புத்தம் புதிதாக வாங்கிச் சென்றேன். அதனைக்கண்டதும் சேனை நாட்டாரவர்கள் ஒருசெய்தியைத் தெரிவித்தார்கள். திரு. இராசாளியார் அவர்கள்பால் புறநானூற்று ஏடுஒன்று இருந்ததாகவும் அதனை ஒருகால் தன்னிடம் தந்து திருத்தமாகப் படியெடுக்குமாறு பணித்தாகவும் அதனைத் தான் அழகாக எழுதி வைத்திருப்பதாகவும் என்னிடம் சொல்லிச் சிலநாட்களுக்குப்பிறகு அக் கைப்பிரதியையும் காட்டினார். அப் பிரதியையும் அச்சாகியிருந்த புறநானூற்றையும் ஒப்புநோக்கியதில் முற்பகுதியில் வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படவில்லை பின்னர் 200 பாட்டுகட்கு மேலுள்ள பகுதிகளை ஒப்புநோக்கியபோது சில பாடல்களில் அச்சுப்பிரதியில் விடுபட்டிருந்த சில அடிகளும் சிலவற்றில் சில திருத்தங்களும் காணப்பெற்றன. அவற்றைமட்டில் அச்சுப் பிரதியில் ஆங்காங்கே குறித்துக்கொண்டோம். அவ்வாறு ஒப்புநோக்கும் பணி 1927-ம் ஆண்டு சூன் மீ 27-ம் நாள் முடிவுற்றது. ஆயினும் இப்பிரதி திரு, டாக்டர் ஐயரவர்கட்குக் கிடைக்காது போனதுபற்றி என் மனதில் ஐயமொன்று ஊசலாடிக் கொண்டிருந்தது. நிற்க பின்பொருகால் எனக்கு இளமையில் தமிழறிவுறுத்திய ஆசிரியரும் திண்டிவனம் A. A. M. ஹைஸ்கூலில் தமிழாசிரியராய் இருந்தவருமான சீர்காழி திரு. கோவிந்தசாமி ரெட்டியார் அவர்கள் வைத்திருந்த ஐங்குறுநூற்றுக் கையெழுத்துப்படியும் அச்சாகி வெளியிடப்பட்டிருந்த ஐங்குறுநூற்றையும்

ஒப்பு நோக்கும் வாய்ப்புப் பெற்றேன். அப்போது அச்சுப்பிரதியில் காணப்படாத சில வேறுபாடுகள் கிடைத்தன. அதனால் டாக்டர் திரு. ஐயரவர்களுடைய முயற்சிக்கும் அகப்படாத நிலையில் ஏடுகள் பல தமிழ் நாட்டில் உள்ளன என்று ஐயம்தெளிந்தேன் இத்தெளிவால் பழைய ஏடுகளைத் தேடுவதில் வேட்கையொன்று என் உள்ளத்தே கிளர்ந்தெழுவ தாயிற்று'' என்று தன் முன்னுரையில் கூறுகிறார்.

என்ன பொருள்? இக்காலப் பார்ப்பனர்கள் முன்னவர்களைக் காட்டிலும் ஒரு படி மேலானவர்களாய் விளங்குகின்றார்கள் என்பது தானே? ஏட்டையே திருத்தம் செய்திருக்கிறார்!

திரு, ஐயரவர்கள் இல்லாவிடில் சங்க இலக்கியங்களே கிடைத்திருக்காது என்று சொல்லுபவர்கள் உண்மையிலேயே இது தமிழ்த்தொண்டா? என்று தங்கள் நெஞ்சில் கைவைத்துச் சொல்லட்டும். இவ்வாறு தமிழுக்குத் துரோகம் செய்வதினும் வேறொன்றையும் பெரிதாக எண்ணார்கள் பார்ப்பனர்கள் என்பது வெளிப்படை!

என்னதான் அவர்கள் உண்பதும், உடுப்பதும் உறைவதும் தமிழ்ச்சோற்றாலே என்பது தெரிந்தாலும் வடமொழிதான் தங்களுக்குத் தாய்மொழி என்று கூறிக்கொள்ளப் பின் வாங்குவதில்லை, மாறாகப் பெருமையேபடுகிறார்கள். எனவே தமிழ்ச்சமூகத்தினர் விழிப்புடன் இருக்கவேண்டும்!

<u>மருத்துவப் பகுதி</u>

தொழுநோய்

"சித்தன்"

அறிவாலே உயர்ந்தவனைப் பெரியோன் என்போம்;
°அகவையினால் உயர்ந்தவனும் பெரியோன் ஆனான்;
செறிநோய்கள் அனைத்திற்கும் தொழுநோ யொன்றே
சீர்த்தலைமை ஏற்றிடுநோய்; அதனாலன்றோ,
அறிவாலே உயர்தமிழர் பெருநோய் என்றே
அறிந்திதற்குப் பேரிட்டார்! அழகு சொட்டும்
°முறிமேனி யானாலும் பெருநோய் பற்றின்
முள்ளிலவு போன்மாறும்; முடியும் வாழ்வே!

°அகவை = வயது °முறிமேனி = தளிர்போன்ற உடல்

தாயிகழ்ந்த கொடியார்க்கும் சங்கம் சார்ந்த
தமிழிகழ்ந்த சிறியார்க்கும் தன்னு சானை
யே,யிகழ்ந்த வன்கணர்க்கும், இடுக்கண் தீர்த்தார்க்
கின்னல்தரும் மதியிலர்க்கும், °நட்டா ரைப்பின்
போயிகழ்ந்த கயவர்க்கும் புலன்கா வார்க்கும்
பொங்கியெழும் சாபமெனப் புலவர் முன்பிந்
நோயிகழ்ந்தார்! இறையருளோ விதியோ என்றே
நோகன்மின்! நோயணுவே இதற்கு வித்தாம்

°நட்டார் = நட்பினர் °நோயணு = கிருமி

உலகினில், ஐம் பதுநூறு யிரவர் இந்நோய்
உயிர்வாட்ட வாழ்கின்றார் உடல்சுமந்தே!
பலகோடிக் குத்திட்டம் பறக்கு மிந்தப்
பாரதத்திற் பழுதானோர் பத்தி லட்சம்!
உலகத்தில் நம்பங்கோ ஐந்தில் ஒன்றாம்!
உயரிமயம் குமரியிடை யுள்ளார் தம்மில்,
கலைமலிசீர்த் திருவிடத்தின் கணக்கே ராளம்!
கண்மூடி வாழ்ந்ததற்குக் கைம்மேற் கூலி!

உலகில் 50 இலட்சம் தொழுநோயாளர் உளர்.
இந்தியாவில் 10 இலட்சம் பேர் உளர்.
இந்நோய் திராவிடநாட்டில் அதிகம்

தொழுநோயை ஐரோப்பாக் கண்டம் வாழ்வார்
தொலைத்துவிட்டார்; தொழுநோய்க்குத் தோல்வி அங்கே!
தொழுநோயின் அரசாட்சி சூழ்நா டிந்தத்
தொல்புவியில் பாரதமாப் பிரிக்கா. சீனு,
முழுநேர ஊழியர்வாழ் சப்பான், தெற்கு
முகத்தமைந்த அமரிக்கா இவைக ளாகும்!
வழுவாமல் நன்னெறியின் வரம்பு நின்றார்.,
வளரிப்பேய் இதயத்தில் வாளிட் டாரே!

(தொடரும்)

கம்பன் தொண்டு

பொன்னும் மாமணி யும்புனே சாந்தமும்
கன்னி மாரொடு காசினி ஈட்டமும்
இன்ன யாவையும் ஈந்தனள் அந்தணர்க்கு
அன்னமும் தளிர் ஆடையும் நல்கினுள்.

தன் மகன் இராமனுக்கு முடிசூட்டப் போவதைக் கேட்டுக் கோயிலுக்குப் போய்ப் பார்ப்பனர்க்குத் தானமாகப் பொன்னையும் பெருமை பெற்ற மணிகளையும், பூசுதற்குரிய சந்தனத்தையும் இளம் பெண்களையும், பல ஊர்களையும் இவைபோன்றவைகளையும் சோற்றையும், ஆடைகளையும் அளிக்கின்ருள்.

இராமாயணத்தைத் தமிழாக்கிய கம்பன், தமிழ்ப்பண்பாடு கெடாமல் – தக்கவாறு மாற்றியமைத்துள்ளான் என்கின்றனர்.

எங்கே மாற்றியமைத்தான்? – பார்ப்பானுக்கு இளம் பெண்களையும் கொடுப்பதென்பது தமிழர் பண்பாடா? – அந்த இழிசெயல் ஆரியர்க்கு ஏற்கும். அதை அப்படியே தமிழர் முன் வைக்கும் கம்பனின் செயல் எத்தகையது? எண்ணுக.

தமிழின் சிறப்பு

புதுவை, வ. பொன்னம்பலம்.

வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே என்ற இசை:

மூவேந்தர் மடியில் தவழ்ந்த முத்தமிழே
மூத்த மொழியெனப்பேர் வாய்ந்த நல்லமுதே
பாவேந்தர் பல்லோரை ஈன்ற நற்றமிழே
பகைவரும் மனம்மாறும் தூய செந்தமிழே!

தமிழரின் மூச்சுநீ எனில் மிகையாமோ?
தனித் தமிழாட்சி எந்நாள் மலர்ந்திடுமோ?
இமயமும் உன்றனுக் கீடிணையாமோ?
என்றும் இனிமை தருந் தீந்தமிழே!

உனக்கோர் ஊறு வந்தால் பொறுப்பாரோ
உண்மைத் தமிழர்கள்தாம் உறக்கங் கொள்வாரோ
கனவிலு முனைவிலை பேசிடு வாரோ
காசுபெறப் பகைவன் தாள் பணிவாரோ

இலக்கிய இலக்கண மிகுவள மொழியே
இயலிசை நாடகம் அமைந்த தெம்மொழியே
கலைகள் வளர்த்த தெங்கள் தமிழ்மொழியாகும்
காசினியோர் புகழும் தேன் மொழியாகும்!

வையமுழுதும் தமிழ் ஆர்வம் கொண்டிடவே
வாழ்த்தி வணங்கும்நிலை நந்தமிழ் பெறவே
செய்வாய்நீ கடமையை அறிந்துசெய் தொண்டு
செய்பவனே தமிழர் விரும்பும் கற்கண்டு!

விற்பனையாளர்க்கு...!

சில விற்பனையாளர்கள் நமக்கனுப்பவேண்டிய பட்டியல் தொகையை இன்னும் அனுப்பவில்லை.

இந்த அறிவிப்பு கண்டும் அவர்கள் பணம் அனுப்பாவிடில் அடுத்த இதழ் முதல் "குயில்" அனுப்புவது நிறுத்தப்படும்.

அமைச்சர்

மீட்சிக்கு வழியுண்டு

இராங்கியம், எழில் வழுதி

தம்பக்கத் துள்ளேயே பகைமை கொண்டு
தன்மானம் காவாமல் நம்போன் றார்கள்
கும்பியினைக் காப்பதற்காய் வாலை ஆட்டும்
குக்கலெனச் சேர்கின்றோம்! நந்தம் ஆட்சி
வம்பர்களின் கையினிலே சிக்க, நாமோ
வாழ்வதற்கே தவிக்கின்றோம்! வடவர் என்றால்...!
நம்மவரின் வரிப்பணத்தைக் கொள்ளை கொண்டு
நாட்டுகின்றார் திட்டங்கள் அங்கே! அங்கே!

ஐந்தாண்டுத் திட்டமென்றார்! அதில்நம் அன்னைக்
களவாக ஊட்டினரா என்றால் இல்லை!
நைந்தாள்நம் தாய்!மேலும் வரியைப் போட்டு
நலிக்கின்றார் நம்நாட்டை! நலங்கொள் கின்றார்,
செந்தாழம் பூமணத்தை நுகரு கின்றார்!
சிறுநாகம் தீண்டிடநாம் சாக, அன்னார்
பைந்தாளில் தலைவைத்து வணங்கு வோர்கள்
பாராண்டார்! மானத்தை அடகு வைத்தார்!

முன்பொருநாள் இமயத்தே வெற்றி நாட்டி
முரண்டெழுந்த கனகனையும் விசயனையும்
என்பொடிய இடுப்பொடியக் கல்லை ஏற்றி
எடுத்துவரச் செய்தார்கள் நம்முன் னோர்கள்!
இந்நாட்டின் மானத்தை உயிரைக் காத்தார்!
இந்நாளில் அரசாளும் இளித்த வாயர்
நந்நாட்டைத் 'தமிழ்நாடே' என்ற ழைத்தால்
நாக்கூசும் என்கின்றார் வெட்கக் கேடு!

இம்மட்டோ? இந்தியெனும் செந்தேள் கொட்ட
இங்கிருப்போர் துடிக்கின்றார்! இலங்கை நாட்டில்
தம்முரிமை பெறுவதற்கும் தடையைப் பெற்றுத்
தாராள மாய்த்(!) தமிழர் வாழு கின்றார்!
எம்முறையும் இல்லாமல் இருக்கும் போது
எம்முரிமை தனைக்காப்பீர் என்று சொல்லி
விம்முகின்ற தமிழருக்கு வாழ்வே இல்லை!
வேதனையை விளக்குதற்கோ காலம் போதா!

மீட்சிக்கு வழியுண்டு! தமிழ நாட்டார்
மீசையினை முறுக்குதற்குப் பெரியார் உள்ளார்!
ஆட்சிக்குத் தமிழரென்றே ஆக வேண்டும்!
ஆரியத்தின் வடவர்பிடி அறுக்க வேண்டும்!
காட்சிக்குத் தமிழரெனின் நடுங்க வேண்டும்!
களிப்பெய்தத் தமிழ்நாடு காண வேண்டும்!
தோட்செருக்காற் றினவெடுக்கத் தொல்லை மாய்க்கத்
தூயவரே! தமிழ்நாட்டீர்! ஒன்று சேர்வோம்!

எங்கொளித்தாய்?

≠ **புதுவை. பா. முத்து** ≠

திருவிழியில் ஒளிபொங்கச் சிரிப்பாய்! உள்ளம்
தித்திக்க மொழிபேசிக் களிக்க வைப்பாய்!
கருவிழியாம் வாள்வீசிக் கண்டோர் தம்மைக்
கருத்தழியச் செய்திடுவாய்! வளைகு லுங்கத்
தெருவழியே அன்னம்போல் நடப்பாய்; காணத்
தெளிவிழப்பேன்; செயல்மறப்பேன்; இன்றோ [உன்றன்
உருவழிந்து போனதடி! உருக்குப் பொன்னின்
உயிர்ச் சிலையே! உன்னெழிலை எங்கொளித்தாய்?

பள்ளிவிடு நேரத்தில் வந்து பார்ப்பேன்;
பாவையரின் குழுவில்பே ரரசி போலத்
துள்ளுகின்ற நடைபோட்டுப் பிடியை நீயும்
தோற்கடிப்பாய்; தோகையுன் எழிலைக் காணக்
கள்ளுண்ட வெறியனென ஆவேன்! கொவ்வைக்
கனியிதழின் சுவைகாணத் துடிப்பேன்; இன்றோ
எள்ளுகின்ற நிலைஏற்றாய்; உடலிளைத்தாய்
ஏந்திழையே! எழிலெல்லாம் எங்கொ ளித்தாய்?

வானுலவும் முழுநிலவு வந்தே உன்றன்
வளநிறைந்த முகத்துலவும்; தெவிட்டா இன்பத்
தேனுலவும் இதழ்விரிய ஒளிரும் முத்தில்
திருவெல்லாம் நின்றுலவும்; நடையில் வல்ல
கானுலவும் மடப்பிடியே! கனியின் சாறே!
கன்னல்நிகர் மொழியாளே! அணங்கே இப்போ(து)
ஏனிலவு முகம்வெளுத்துக் காணு கின்றாய்?
இன்னமுதே! எழிலெல்லாம் எங்கொ ளித்தாய்?

குயில்நாணும் குரலெங்கே? கொவ்வைச் செவ்வாய்
கொடியுடலும் குளிர்முகமும் எங்கே? காட்டு
மயில்நாணும் நற்சாயல் எங்கே? கொண்டல்
மருண்டோடும் குழலெல்லாம் எங்கே? எங்கே?
கயல்நாணும் கருவிழிகள் கண்டு வீரன்
கைப்பட்ட கூர்வாளும் நாணும் அந்நாள்;
அயல்காணும் போதினூறு இரங்கு கின்றேன்!
ஆரணங்கே எழிலெல்லாம் எங்கொ ளித்தாய்?

விளம்பரம் செய்ய...

குயிலில் ஒரு தடவைக்கு:

முழுப்பக்கத்திற்கு	ரூ.	100
அரைப்பக்கத்திற்கு	ரூ.	50
கால் பக்கத்திற்கு	ரூ.	30

சொல்வதென்றால் வெட்கமடி தோழி!

—: பாலு :—

கருங்கடலின் கட்டுடைத்துக் காலைக் கதிரவனின் கதிர்கள் வெளிப்போந்தன. பொழுதுபுலர்ந்தது; தான்செய்த தவத்தால் என்ற எண்ணமேலீட்டால் தன் கழுத்தை உயர்த்திக் 'கொக்கரக்கோ' எனக் கூவிற்றுச் சேவல்!

அவள் படுக்கையினின்றும் துள்ளி எழுந்தாள். காலைக் கடன்களை முடித்தாள். செப்புக்குடத்தை இடுப்பிலேந்தி, கோலச் சிற்றிடை கொடிபோல் துவள, அப்படி இப்படி வலதுகை அசைய, நீர் மொள்ளக் குளக்கரை நோக்கி நடந்தாள்.

"மதிமருட்டும் சிறுநுதல் பேரமாக்கண் செய்ய வாய் ஐயநுண்ணிடை" என்ற காரிகையாசிரியரின் கற்பனைக்கொப்ப வடித்தெடுத்தசெப்புச்சிலைநிகர்த்த அன்னாளை அவன்கண்டான். ஓரவிழியால் அவனைக் கண்ட அவள்வாய் அவளையும் அறியாமல் புன்னகை பூத்தது. அன்று தொடங்கி அவர்கள் நாள்தவறாமல் சந்திக்கலாயினர்.

அவளின் போக்கில் மாறுதல் கண்ட செவிலி ஐயமுற்று வேவு பார்க்கத் தொடங்கினாள். குட்டு வெளிப்பட்டது. செய்தி அறிந்த அவனின் தந்தை அவள் பெற்றோர்களை அழைத்துப்பேசி மன்றலுக் குரிய நாளைக் குறித்தார்.

அந்த நாளும் வந்தது ஆன்றோர் பலர் கூடி இருமனமொத்த அத் திருமண மக்களை நீடுழி வாழ வாயார வாழ்த்தி மணவினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

இறுதியில் அத் திருமண மக்கள் செவ்வையுற இன்பத் திருவிழாவைத் தொடங்கும் அந்த நேரமும் வந்துற்றது. கையிலே பாலும் பழமும் கொடுத்து அவளைத் தலைவனிடம் இட்டுச் சென்றனர் தோழிகள்.

மறுநாள் உலகமிசை உணர்வெழுப்பக் கீழ்த் திசையில் கதிரவன் உதிக்குமுன்பே தோழிகள் 'அவளை' அழைத்து வரப்புறப்பட்டனர்- நாணமும் அச்சமும் பிடுங்கித் தின்ன அவள் வெளியே வந்தாள். இது வெறும் வாயை மென்று கொண்டிருப்பவர்க்கு அவல் கிடைத்த கதையாயிற்று! பகடிக்கணைகள் பறந்தன!

ஐயையோ...!

என்னடி?

என்னேடி?

....

இங்கே பாத்திங்களாடி முத்துப் பவழமாகவும் பவழம் முத்தாகவும் மாறியிருக்கும் விந்தையை!

என்னடி சொல்றே?

விவரமாச் சொல்லேண்டி!

ஏடி கண் சிவக்க இதழ் வெளுத்திருக்கே

அதைத்தானே சொல்றே?

சீ! சும்மாஅவளே தொந்திரவு பண்ணுதிங்கடி.

நீ சும்மா இருடி.

ஏண்டியம்மா உங்களிலே யாரு முதலிலே பேசினது? நீயா? அவரா?

அவரு என்னடி சொன்னார்?

சீ...சீ...அதுவேண்டாம்'டி அவர் என்னடி செய்தார்?...அதைச் சொல்லடி!

இப்பேச்சுக்கு எல்லோரும் 'கொல்' என்று சிரித்தனர். அவளோ அயர்ந்து அசைவற்று நின்றாள் ஒரு நொடிதான்! அடுத்த கணமே அவள் நாணம் தெளிந்து பேசத் தொடங்கினாள், இல்லையில்லை பாடத் தொடங்கினாள். தோழிகள் ஊமைகளாயினர் தோழிகளின் வாய் மூடிக்கொள்ளுமளவுக்கு அவள் பாடிய பாட்டு இதோ!

சொல்வ தென்றால் வெட்கமடி தோழி—சொல்லச்
சொல்லு கின்றாய் என்துணைவன்
சொன்னதையும் செய்ததையும் (சொ)
முல்லை விலை என்னஎன்றான்
இல்லை என்று நான்சிரித்தேன்
பல்லை இதோ என்றுகாட்டிப்
பத்து முத்தம் வைத்துநின்றான் (சொ)
பின்னலை பின்னே கரும்பாம்பென்றான்—உடன்
பேதை துடித்தேன் அணைத்துநின்றான்
கன்னல் என்றான் கனியிதழைக்
காதல் மருந்தென்று தின்றான் (சொ)
நிறையிருட்டில் ஒருபுதிரைப் போட்டான்
நிலவெறிப்ப தென்னவென்று கேட்டான்
குறைமதியும் இல்லை என்றேன்
குளிர் முகத்தில் முகம்அணைத்தான் (சொ)

(புரட்சிக் கவிஞரின் கவிதைகள் பகுதி II)

குயில்

Regd. No. M. 7030.

தாயும் பிள்ளையும்

பாட்டு

கிச்சி கிச்சி

அழுத பிள்ளை சிரிக்குமாம்
அக்குளைக் காட்டு; கிச்சி கிச்சி கிச்சி (அழுத)

பொழுது போனதே அடுப்பில் உலை
பொங்கி வந்ததே கிச்சி கிச்சி கிச்சி
ஒழித்துப் போட்ட ஏன மெல்லாம்
துலக்க வேண்டும் கிச்சி கிச்சி கிச்சி (அழுத)

குப்பை கூளம் கூடமெல்லாம்
கூட்டவேண்டும் கிச்சி கிச்சி கிச்சி
சுப்பாய் போல அப்பா வருவார்
சுவை நீரும் கொடுக்க வேண்டும் (அழுத)

மந்தை மாடு வரும் வேளை
வைக்கோல் அள்ளிப் போடவேண்டும்
குந்தி யிருக்கச் சரிப்படுமா
கொஞ்சும் கிளியே கிச்சி கிச்சி கிச்சி (அழுத)

கிலு கிலுப்பை இந்தா உனக்குக்
கலகலென்று நீ குலுக்கே!
அலுவலே நான் பார்ப்ப தற்கே
எனேஅனுப்பு — கிச்சி கிச்சி கிச்சி (அழுதபிள்ளை)

>o✱o<

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: பாரதிதாசன், புதுச்சேரி.
அச்சிடுவோர்: மா. தண்டபாணி, பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.